**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. உலகின் மிகப் பழைய சமயமாகச் சைவம் விளங்குகின்றது என்று கூறியவர் யார்?
2. 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிவனைக் குறிப்பிடும் நூல் எது?
3. எவருடைய முயற்சியால் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்தார்?
4. கவிராட்சசர் என்று அழைக்கப்படுவர் யார்?
5. கூர்ம அவதாரம் என்பதில் 'கூர்மம்' என்பதன் பொருள் என்ன?
6. முதல் மூன்று ஆழ்வார்களின் பெயர்களைக் குறிப்பிடு.
7. வேதம் தமிழ் செய்த மாறன் எனப் போற்றப்படுபவர் யார்?
8. வில்லிபாரதம், பாரத வெண்பா ஆகியவை எச்சமயக் காப்பியங்கள்?
9. சமணம் என்பது எந்த வடசொல்லின் திரிபு?
10. ஐஞ்சிறு காப்பியங்களில் சிறந்த வாதநூல் எது?
11. தமிழகத்தில் பௌத்த சமயம் யாருடைய காலத்தில் கால் கொண்டது?
12. பௌத்த சமயத்தின் பெரும் பிரிவுகள் யாவை?
13. ச.து.சு. யோகியார் எழுதிய காவியம் எது?
14. நபிகள் நாயகம் விண்ணேற்றம் பெறப் பயன்பட்ட வாகனம் எது?
15. மஹதி என்பவரின் இயற்பெயர் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி பாடிய நூல்கள் யாவை?
2. மீனாட்சி சுந்தரம் பிள்ளை – குறிப்பு வரைக.
3. திருமாலின் அவதாரங்களைப் பட்டியலிடுக.
4. வைணவப் புலவர்கள் எழுதிய இலக்கண நூல்களைக் கூறுக.
5. சமணத்தின் தொன்மை குறித்து எழுதுக.
6. உவவனத்திலுள்ள பதும பீடத்தின் சிறப்பை விவரி.
7. கீர்த்தனைக் கவிஞர்கள் யாவர்?
8. சுழுமுனையாவது யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) திருமந்திரத்தின் சிறப்பியல்புகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சைவச் சிற்றிலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

2. (அ) திருமாலின் புகழை எட்டுத்தொகை விவரிக்கும் திறத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சமணர்களின் தமிழ்த்தொண்டினை விரித்துரைக்க.

3. (அ) பழந்தமிழ் நூல்களில் பௌத்தத்தின் செல்வாக்கினைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் உரைநடை வளர்ச்சிக்குக் கிறித்தவர்கள் ஆற்றிய பங்கு குறித்துக் கட்டுரை எழுதுக.

❋ ❋ ❋